ஸ்ரீ ஹரி:

ஜூலை 2018

# மதுரமுரளி

வேணு 23 | கானம் 12

மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன் வெளிவரும்
தெய்வீக மாதப் பத்திரிகை



Delivered by India Post
www.indiapost.gov.in

தனி பிரதி ₹15
ஆண்டு சந்தா ₹180

காஞ்சி ஸ்ரீ மஹாஸ்வாமி ஜயந்தி உத்சவம்,
ஸ்ரீ பாதுகா புறப்பாடு, மதுரபுரி ஆஸ்ரமம், 29 May




# மதுரமுரளி

**வேணு 23 | கானம் 12**


**ஹரே ராம ஹரே ராம**
**ராம ராம ஹரே ஹரே**
**ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண**
**க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே**

## பொருளடக்கம்


| | |
|---|---|
| மதுரமான மஹநீயர் -268 | 5 |
| கேள்வி பதில் | 7 |
| நாமம் ஒன்றே போதுமே!! | 9 |
| ஸத்ஸங்கம் | 11 |
| பகவானும் ஞானிகளும் | 15 |
| பக்தி பங்கப்படக் கூடாது | 16 |
| பாலகர்களுக்கு ஒரு கதை | 17 |
| செய்திகள் | 24 |
| மாதம் ஒரு சம்ஸ்க்ருத வார்த்தை | 30 |
| சைதன்ய மஹாப்ரபு | 32 |
| படித்ததில் பிடித்தது | 35 |



# மதுரகீதம்

## அதிவிரைவில் என் முன்னே வந்திடுவாய்

**ராகம்: ஆஹிரி**

**தாளம்: ஆதி**

**பல்லவி**

அதிவிரைவில் என் முன்னே வந்திடுவாய் – கண்ணா
அதிவிரைவில் என் முன்னே வந்திடுவாய்

**சரணங்கள்**

உன் அழகு தாமரை முகத்தை காணாமல் – நான்
எத்துனை காலம்தான் தவித்திடுவேனோ (அ)

நீயே என் தலைவன், ஸ்வாமி எல்லாம்
அடிமை என்னை பாராதிருப்பதேனோ (அ)

பக்தன், ᑌᑌரண்யன், தீனன் எனக்கு – உன்
அன்பு வார்த்தைகளால் அபயம் அளித்திடுவாய் (அ)

---

<u>முன் அட்டை:</u>
சீதா கல்யாண வைபவத்தில்,
சென்னை
<u>பின் அட்டை:</u>
திண்டுக்கல்



# மதுரமான மஹநீயர்

- டாக்டர் ஆ பாக்யநாதன்
(ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின்
அந்தரங்க செயலாளர்)

அண்மையில், ஆஸ்ரமத்திற்கு வந்திருந்த அன்பர் ஒருவர் நம் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களிடம், "பக்தி என்பது இறைவன்பால் கொள்ளும் அன்பு என்று தானே சொல்லப்பட்டுள்ளது. அப்படியிருக்க, வழக்கத்தில் 'பய பக்தியுடன்' என்று சொல்கின்றோமே! பயமும் பக்தியும் எப்படி ஒரு சேர இருக்க முடியும்?", என்ற கேள்வியை எழுப்பினார். ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் இதற்கு மிக அழகான ஒரு விளக்கத்தைச் சொல்லி அருளினார்கள். அது பின்வருமாறு -

பகவானிடம் பயம் வேண்டும் என்று சிலர் சொல்லுகின்றார்கள். சிலர் பகவானைப் பார்த்து ஏன் பயப்பட வேண்டும்? பகவானைப் பார்த்து பயப்பட வேண்டும் என்பதே எனக்குப் பிடிக்கவில்லை. பகவானிடம் அன்பு தான் வேண்டும். அதாவது பக்தி மட்டும் இருந்தால் போதும் என்பார்கள். பகவானிடம் பயம் வேண்டுமா? பக்தி வேண்டுமா? அல்லது பயபக்தி வேண்டுமா? பகவான் என்ன சிங்கமா, புலியா? அல்லது நாம் பார்த்து பயப்படுவதற்கு அவர் என்ன தேள், பாம்பு போன்ற ஜீவராசியா? அல்லது நம்மைப் பிடிக்காதவரா? எதிரியா? ஏன் பயப்பட வேண்டும்? அவரோ நம் தந்தை, தாய், காவலர், தலைவன், நாதன் எல்லாமும் தானே! அப்படியிருக்க பயம் எதற்கு? ஏதாவது சாபம் கொடுத்து விடுவாரோ? அல்லது தண்டனைக் கொடுத்து விடுவாரோ என்ற பயமா? அப்படியெல்லாம் இருந்தால், அவர் தெய்வமே இல்லை.

தன் காலால் உதைத்த 'பிருகு' முனிவரிடம் கூட "உன் கால்கள் வலிக்கின்றதா?", என்று கேட்டவர் அல்லவா பகவான். கோபமே வராது. தண்டனையே தெரியாது. யாரையும் கெடுக்கவும் மாட்டார். எல்லோரையும் வாழ வைப்பார். தன்னை நம்பியவர்களை கைவிடவே மாட்டார். பின் ஏன் பயப்பட வேண்டும்? இது ஒரு புறம் இருக்கட்டும்.

உலக வாழ்க்கைக்கு வருவோம். நமக்கு ஒருவரை மிகவும் பிடிக்கும். அவரையே பார்த்துக் கொண்டிருப்போம். அவருடனே சேர்ந்து இருக்க ஆசைப்படுவோம். அவரை பிரிந்தால் மிகவும் துக்கம். அவர் நம்மை பார்த்து சிரிக்க மாட்டாரா? பேச மாட்டாரா என்று ஏங்குவோம். என்ன காரணம்? தெரியாது, அவரைப் பிடிக்கும் அவ்வளவு தான். அவர் நம்மை எவ்வளவு அலட்சியப்படுத்தினாலும் பொறுத்துக் கொள்வோம். அதை லட்சியமே செய்ய மாட்டோம். நம்மைப் போலவே பலரும் அவருடன் பேசுவதற்கும் பழகுவதற்கும் ஏங்குவதைப் பார்ப்போம். அவருடன் சம்பந்தம் ஏதாவது ஒரு விதத்தில் வைத்துக் கொள்ள ஆசைப்படுவார்கள். அப்படி நாம் விரும்பும் ஒருவர் நம்மை பார்க்கவில்லை, நம்முடன் பேசவில்லை, பாராமுகமாக இருக்கின்றார் என்றால் நம்மால் தாங்க முடியாது. பைத்தியம் பிடித்தது போல ஆகிவிடும். அந்த அனுபவத்தை எழுதிப் புரிய வைக்க முடியாது.

இப்பொழுது விஷயத்திற்கு வருவோம். ஒரு மனிதனுடன் பழகும் பொழுதே இந்த நிலைமை என்றால் பகவானுடைய அன்பு எத்தகையது? மனிதர்களான நாம் பகவானிடம் வைக்கும் அன்பு மனித இயல்பு கொண்டது. தெய்வம் நம் மீது காட்டும் பரிவு தெய்வீகமானது. அத்தகைய தெய்வத்தின் அன்பை அனுபவிப்பவர்களுக்குத்தான் அதன் சுகம் தெரியும்! நாம் செய்யும் செயல்கள் ஏதாவது தெய்வத்திற்கு பிடிக்காமல் போய், அவர் நம்மிடம் பாராமுகமாகி, அவருடைய தெய்வீகமான அன்பை இழந்து விடப் போகின்றோமே என்ற பயம் எப்பொழுதும் நம்மிடையே இருக்க வேண்டும். அந்த பயத்துடன் கூடிய பக்தி இருக்கத்தானே வேண்டும்? இதை யார் மறுக்க முடியும்!

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜியின் பதில்கள்

## கேள்வி:

நாம் மஹான்களின் ப்ரவசனங்களைக் கேட்கும்பொழுதோ, அவர்களின் புத்தகங்களைப் படிக்கும்பொழுதோ, என்ன கேட்கிறோம் என்றால், நம் வாழ்க்கையில் என்ன நடந்தாலும் அதை கடவுளுடைய ப்ரஸாதமாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்று தான் கேள்விப்படுகிறோம். ஆனால், நமக்கு நிஜமாகவே நடைமுறையில் ஏதாவது ஒரு பிரச்சனை வரும்பொழுது, குருநாதரிடம் சென்று, "எனக்கு இந்தப் பிரச்சனை உள்ளது, அந்தப் பிரச்சனை உள்ளது", என்று ப்ரார்த்தனை செய்கிறோம். "எனக்கு இந்த ஒரு பிரச்சனை இருக்கிறது, அதற்கான ஒரு தீர்வு (solution) வேண்டும்", என்று ஒரு பிரார்த்தனையாக எழுதுகின்றோம். நாமா சொல்லி, பிறகு அகண்ட நாமா செய்து, அதற்கான ஒரு பதிலும் கிடைக்கிறது. அதை ப்ரஸாதமாக எடுத்துக் கொள்ளும் பக்குவம் வரவேண்டும் என்று ப்ரார்த்தனை செய்ய வேண்டுமா? அல்லது அந்தப் பிரச்சனையெல்லாம் போக வேண்டுமென்று வேண்டிக் கொள்வது சரியா? இதில் எதை செய்ய வேண்டும்?

## பதில்:

அது அவரவரைப் பொறுத்த விஷயம் தானே! Universalஆக அதாவது பொதுவாக ஒரு மார்க்கத்தை சொல்ல முடியாது. யாரேனும் ஒருவருக்கு தன்னுடைய பிரச்சனைக்கு ஒரு தீர்வு தான் வேண்டும் என்று அவர்கள் தெளிவாக இருந்தால், அவர்களுக்கு அந்த ஒரு பிரச்சனையிலிருந்து தீர்வு நிச்சயமாக கிடைக்கும். பகவானிடம் போய் பிரார்த்தனை செய்யாமல் வேறு யாரிடம் பிரார்த்தனை செய்வார்கள்? ஆனால், எனக்கு அதெல்லாம் வேண்டாம்; தாங்கிக் கொள்கின்ற மனப்பக்குவம் தான் வேண்டும் என்று கேட்டால், அதுவும் நன்று தான். ஆனால், முன்பே கூறியது போல், அது அவரவருடைய பக்குவத்தைப் பொறுத்த விஷயம்.

ஒருவர் ஒரு அலுவலகத்தில் லஞ்சமே வாங்குவதில்லை என்று முடிவு செய்துவிட்டார் என்றால், அதை நினைத்து அவர் பெருமைப்பட வேண்டும். 'நான் லஞ்சமே வாங்கவில்லை; என்னால் முன்னேற முடியவில்லை' என்று அழக் கூடாது. தெளிவாக இருக்க வேண்டும். 'நான் உண்மையாக இருக்கிறேன். தார்மிகமாக இருக்கிறேன். பொய் பேசவே மாட்டேன். லஞ்சம் போன்ற அதர்மமான வழிகளில் நான் என் வாழ்க்கையை நடத்தமாட்டேன். எல்லாவற்றிலும் நான் மிகச் சரியாக, அதாவது perfectஆக இருப்பேன்', என்று தெளிவுடன் வாழவேண்டும். அப்படி ஒருவர் இருந்துவிட்டு, 'நான் அவ்வளவு சரியாக இருந்தேனே! என்னைவிட பொய் சொல்பவன், லஞ்சம் வாங்குபவன் எல்லாம் பெரிய பெரிய வீடு கட்டிவிட்டானே! காரில் செல்கிறானே! இது எப்படி நியாயம்?' என்றெல்லாம் புலம்புவார் என்றால், அவருக்கு "நீ உண்மையாக இருப்பதாலும், லஞ்சம் வாங்காமல் இருப்பதாலும், பொய் பேசாமல் இருப்பதாலும், உனக்கு காரெல்லாம் வருமென்று எந்த சாஸ்த்ரமும் சொல்லவில்லை", என்பதே பதில்.

ஒரு தார்மிகமான வாழ்க்கை வாழ்ந்தால், we will get inner excellence and inner clarity. நமக்கு நமக்குள் உயர்வு, தெளிவு, மற்றும் ஆத்ம த்ருப்தி, ஆகியவை தான் இதற்கான ஒரு பலனாக கிடைக்கின்றன. திருட்டும் பொய்யும் செய்து வாழ்க்கையில் சுகத்தைத் தேடுபவர்களுக்கு இது நிச்சயமாக இருக்காது.

இறுதியாக ஒருவர் எழுந்து ஒரு கேள்வியைக் கேட்டார்.

# நாமம் ஒன்றே போதுமே!!

**- ஸ்ரீ ஸ்வாமிஜி**

நீரின்றி இவ்வுலகம் இல்லை. நீரை உபயோகித்துதான் நாம் நமது வாழ்வில் எல்லா விஷயங்களையுமே செய்து கொள்ள முடியும். உதாரணத்திற்கு சொல்ல வேண்டும் என்றால், நமக்கு நீர் இல்லை என்றால் நம்மை நாமே சுத்தம் செய்து கொள்ள முடியாது. நமது உடைகளை தூய்மை படுத்திக் கொள்ள முடியாது. உணவு சமைக்க முடியாது. இப்படி அந்த நீர் எல்லா விதங்களிலும் நமது அன்றாட வாழ்க்கைக்கு தேவையான ஒன்று. ஆனால் இவையெல்லாவற்றையும் விட மிக முக்கியமான உபயோகம் என்னவென்றால் நீரில்லை என்றால் நாம் உயிர் வாழவே முடியாது.

ஓரிடத்தில் நன்றாக மழை பெய்து கொண்டே இருக்கின்றது. அந்த மழை மூலமாகத்தான் நமக்கு நீர் கிடைக்க வேண்டும். அந்த நீரை தான் நாம் குளிப்பதற்கு, பல் துலக்குவதற்கு, நம்மை தூய்மை படுத்திக் கொள்வதற்கு, நமது துணிகளை துவைப்பதற்கு பருகுவதற்கு என்று எல்லா விஷயங்களுக்கும் உபயோகிக்க வேண்டும். முதலில் அந்த நீரை நாம் ஒரு இடத்தில் சேகரித்து வைத்துக் கொள்ள வேண்டும் அல்லவா? சேகரித்து வைத்த நீரை நமக்கு எப்படி வேண்டும் என்றாலும் நாம் உபயோகித்துக் கொள்ளலாம்.

அது போல, கடவுளும், கடவுளுடைய அருளும் (Grace) என்பதும் இணை பிரியாதவை. கடவுள் வேறில்லை, அவருடைய அருள் வேறில்லை. God is omnipresent - கடவுள் எல்லா இடங்களிலும் எப்பொழுதும் நீக்கமற நிறைந்திருக்கின்றார் என்றால் அவருடைய அருளும் எப்பொழுதும் எங்கும் நீங்காமல் நிறைந்திருக்கிறது. அது இல்லாத ஒரு நேரம், இல்லாத ஒரு இடம் என்பது இல்லை. அந்தக் கடவுளுடைய க்ருபையைப் பெற்று தேக்கி வைத்துக் கொள்ளும் ஒரு பாத்திரம் போன்றதுதான் 'நாமா'.

அந்த ‘நாமா’, மழை நீரை நாம் எப்படித் தேக்கி வைத்துக் கொள்கிறோமோ, அது போல் கடவுளுடைய க்ருபையை தேக்கி வைத்துக் கொள்ளும். அதை நாம் எப்படி வேண்டுமானாலும் பயன் படுத்திக் கொள்ளலாம். ‘எனக்கு வேலை வேண்டும்’ என்றாலும் அந்த நாமாவை பயன்படுத்திக் கொள்ளலாம். ‘எனக்கு கஷ்டம் போக வேண்டும்’ என்றாலும் பயன் படுத்திக் கொள்ளலாம். ‘குடும்பத்தில் ஒற்றுமை வரவேண்டும்’ என்றாலும் பயன் படுத்திக் கொள்ளலாம். ‘பணம் வேண்டும், பதவி வேண்டும், புகழ் வேண்டும்’ என்று எதற்கு வேண்டும் என்றாலும் பயன் படுத்திக் கொள்ளலாம்.

இல்லை, அந்த நாமாவின் purpose கடவுளை அடைவது மட்டும் தான் என்றால் அதையும் ‘நாமா’ சாதித்துக் கொடுக்கும்.

## விஷம்

என்னீடம் ஒருவர் பேசிக் கொண்டிருக்கும்போது தனக்கு ஒரு மந்திரம் தெரியும். அதை ஜபம் செய்தால் உடலில் எவ்வளவு விஷம் ஏறியிருந்தாலும் இறங்கிவிடும் என்றார்.

நான் அவரிடம் சிரித்துக் கொண்டே, “என்னீடம் மஹாமந்திரம் என்ற மந்திரம் இருக்கின்றது. அதை ஜபம் செய்தால் போதும், மனதில் விஷமாக ஏறியுள்ள விஷய வாசனைகள் எல்லாம் இறங்கிவிடும்” என்றேன்!

- ஸ்ரீ ஸ்வாமிஜி

# ஸத்ஸங்கம்

**(12th ஜூன் ஏகாதசி அன்று திருவல்லிக்கேணி பாண்டுரங்கன் கோவிலில் ஸ்ரீ ஸ்வாமிஜி ஆற்றிய அருளுரையிலிருந்து)**

**- டாக்டர் ஆ பாக்யநாதன்**

மனிதர்களாகப் பிறந்த நம் எல்லோருக்கும் மனதில் பலவிதமான ஆசைகள் இருக்கின்றன. பிறந்ததிலிருந்து இன்றுவரை ஏதாவது ஒரு தேவை இருக்கத்தான் செய்கின்றது. அவை நியாயமானதாகவும் தர்மமானதாகவும்கூட இருக்கின்றன. ஒரு பெண் குழந்தைக்கு காலாகாலத்தில் கல்யாணம் செய்யவேண்டும், கல்யாணம் ஆன தம்பதிகளுக்குக் குழந்தை பிறக்க வேண்டும், பிறந்த குழந்தை ஒரு சத்தான குழந்தையாக இருக்க வேண்டும், வாழ்க்கை வாழ்வதற்கு யாரையும் எதிர்பார்க்காமல் நமக்குத் தேவையான பணத்தை சம்பாதித்துக்கொள்ள ஒரு வேலை வேண்டும், கடன் இல்லாமல் வாழ வேண்டும், நல்ல படிப்பு வேண்டும், வியாதி இல்லாமல் இருக்க வேண்டும், மனதில் நிம்மதியுடன் வாழ வேண்டும் என்பதுபோல் எத்தனையோ தேவைகள் இருக்கின்றன. பகவானின் ஸந்நிதானத்திற்குச் சென்றால் இவற்றுள் எதைப் பிரார்த்திப்பது?

இந்தப் பிரார்த்தனைகள் நிறைவேறுவதற்கு எந்த ஸ்வாமியை நாடுவது? எந்த ஸ்லோகத்தைச் சொல்வது? அல்லது எந்த மந்திரத்தை ஜபிப்பது? போன்ற கேள்விகள் எல்லோருடைய மனங்களிலும் எழுகின்றன. இதெல்லாம் வேண்டாம் என்று சொல்லமுடியுமா?

இவை தவிர சத்சங்கங்களுக்குச் செல்வதாலும் ப்ரவசனங்கள் கேட்பதாலும் ஆன்மீக நூல்கள் படிப்பதாலும் நமக்கு ஞானம் - பக்தி - வைராக்யம் ஏற்பட்டு மீண்டும் பிறவா நிலையை அடையவேண்டும் என்ற ஆசைகளும் இருக்கின்றன.

அந்த ஞான நிலையை அடைவதற்கு எவ்வித உலக பற்றும் இருக்கக்கூடாது. அப்படி உலக விஷயங்களில் பற்றுதலும் பிரார்த்தனைகளும் இருந்தால் மீண்டும் பிறவி எடுப்பது நிச்சயம் என்று வேதாந்த உபன்யாசங்களில் கேட்கின்றோம். அதை நமது நிலையோடு ஒப்பிட்டுப் பார்த்தால் குழப்பம்தான் மிஞ்சுகிறது.

உலகத்தில், நம்மால் ஒரு சிறிய விஷயத்தைக்கூட தியாகம் செய்ய முடியவில்லை. பற்றுதல் இல்லாமல் இருக்க முடியவில்லை. ஒரு ஸ்வாமி சன்னிதியில் அர்ச்சனை செய்வதற்கு, அந்தப் பூஜை செய்பவர், தட்டை எடுத்துக்கொண்டு வந்து, நமது பெயர், கோத்ரம், நக்ஷத்திரம் கேட்கும்பொழுது, ஏதோ ஒரு அவசரத்தில் ஸ்வாமி பெயருக்கு என்று சொல்லிவிடுகிறோம். அவர் ஒரு பத்து அடி உள்ளே போனபிறகு, ‘நம் பெயரை சொல்லாமல் விட்டுவிட்டோமே, ஒரு புண்ணியம் வருவதை ஏன் நிறுத்திவிட்டோம். திருப்பி அவரைக் கூப்பிடலாமா?’, என்ற எண்ணம் வருகிறது. அந்த அளவிற்கு ஒரு சிறிய விஷயத்தைக்கூட விட்டுக் கொடுக்க முடியாது. அதுதான் யதார்த்தம்.

உலக விஷயங்களுக்காக ஒரு விதமான பிரார்த்தனை, ஞானத்தை அடைய வேறொன்று என்று செய்ய முடியுமா? ஒன்று வேண்டும் என்றால் மற்றொன்று கிடைக்காது என்று நாம் குழம்பி தவிக்கும்பொழுது இந்த இரண்டு பிரார்த்தனைகளும் நிறைவேறுவதற்கு ஒரு வழி இருக்கிறது என்று நம் ஸத்குருநாதர் ஸ்ரீ ஸ்ரீ அண்ணா அவர்கள் தன்னுடைய அபங்கத்தில் சொல்கிறார்கள்.

ஸத்ஸங்க மஜலா தேஹி தேஹி! தூஸரா வர நாஹி நாஹி!!

இது ஒன்று கிடைத்துவிட்டால் வேலை, கல்யாணம், குழந்தை, பணம் எல்லாம் கிடைத்துவிடுமாம். ஞானம், பக்தி, வைராக்யம், மோட்சம் இவையும் கிடைத்துவிடுமாம். அது என்ன என்றால், அதற்குப் பெயர்தான் ஸத்ஸங்கம்.

ஸத்ஸங்கம் என்றால், உண்மையான ஸாதுக்களின் ஸங்கம். அது நமக்குக் கிடைத்துவிட்டது என்றால் ‘தூஸரா வர’ இரண்டாவது வரத்திற்கு தேவையே இல்லையாம். நாம் இறைவனிடம் போய், ‘‘ஒன்றே ஒன்றை மட்டும் கொடு.

இன்றைக்கு நீ அதைக் கொடுத்துவிட்டு பிறகு, நாளைக்கு வேறு ஏதாவது கேட்பேன் என்று பயப்படாதே. நான் வேறு எதையும் கேட்கவே மாட்டேன். உன் கோவிலுக்கு வருவேன். ஆனால், உன்னிடம் எதுவும் நான் கேட்க மாட்டேன். நான் உள்ளே வரும்பொழுதே, இவன் என்ன கேட்பானோ என்னும் பயம் உனக்கு வேண்டாம்'' என்று சொல்லிவிடலாம். அந்த ஒன்றுதான் ஸத்ஸங்கம்.

''இஹபர ஸாதன தூஸரா நாஹீ...மாவுலீ விட்டல ரகுமாயீ''

உலக வாழ்க்கைக்கு வேண்டிய தேவைகள், பரலோகத்திற்கான தேவைகள் என்று இரண்டு தேவைகள் நமக்கு இருக்கின்றன. உலக வாழ்க்கை வாழ்வதற்கு சில கர்மாக்களும், மோக்ஷம் அடைவதற்கு வேதாந்த விசாரம், பகவத்கீதை, உபநிஷத் போன்றவையும் தனித்தனியாக ஸாதனைகளாக சொல்லப்பட்டு இருக்கின்றன. ஆனால், ஸாது ஸங்கம் அப்படியில்லை என்று ஸ்ரீ ஸ்ரீ அண்ணா சொல்கிறார். இஹத்திற்கு ஒரு வழி, பரத்திற்கு ஒரு வழி என்று இல்லாமல் ஒரே வழியாம். அது என்ன வழி? என்றால், ஸாது ஸங்கத்தில் வந்து அமர்ந்தாலே போதும். வேறு ஒன்றும் செய்ய வேண்டாம்.

அத்தகைய ஸாதுஸங்கம் என்பதை எப்படி தெரிந்து கொள்வது? அவர்கள் எப்படி இருப்பார்கள். பகவத்கீதையில் ஸ்தித ப்ரக்ஞனின் லக்ஷணங்கள் எல்லாம் அர்ஜுனன் கேட்கும்பொழுது, ஜீவன்முக்தன் இப்படி இருப்பான் என்று பகவான் ஸ்ரீ க்ருஷ்ணன் சொல்கிறார். ''உண்மையான ஸாதுக்கள் என்பவர்கள் யார்? அவர்கள் எப்படி இருப்பார்கள்?'' இந்த கேள்விகளுக்கு அழகாக ஸ்ரீ ஸ்ரீ அண்ணா அவர்கள் பதில் அளிக்கிறார்கள்.

அப்பேற்பட்ட ஸாது ஸங்கத்திற்கு ஏன்? சேவை செய்ய வேண்டும் என்பதை 'கோடி ஜன்ம புண்ய ஸாதன ஸாத்யம், கோவிந்த தாஸ மண்டல தாஸ்யம்' என்று மற்றொரு கீர்த்தனத்தில் பாடுகிறார்கள். கோடி ஜன்மத்தில் புண்ணியம் செய்திருந்தால்தான் ஒரு ஹரிதாஸரை தரிசிக்கும் பாக்யம் கிடைக்குமாம். அந்த ஹரிதாஸர் நம்மைப் பார்த்து ஒன்றைக் கொடு என்று கேட்பதற்கு நாம் கோடி ஜன்மத்தில் புண்ணியம் செய்திருக்க வேண்டுமாம். அந்த ஹரி தாஸர்கள் யார்? எப்படி இருப்பார்கள்?

தொடரும்...

# Colourful Printed Maths Regular / Olympiad Practice Worksheets for Classes 1 – 5 by EMATZ

**Worksheets at your doorstep at reasonable price with no extra delivery cost**

BUY ANY TWO PACKS AT GREATER DISCOUNT




- Suitable For All Boards
- Covers all topics taught in the school
- 10 questions / 252 worksheets / 36 weeks

## HOW EMATZ TAKES CARE OF YOUR CHILD NEEDS

- Solutions for all questions
- Flexibility to purchase any topic of your choice
- Can be used for Regular practice / Tests / Exams

## What else EMATZ has for kids

- Maths Olympiad (Classes 1 – 5)
- Phonics 3-letter words (Level 1), 4 & 5 letter words (Level 2)

em
Enhancing your child's self learning

Login to www.ematz.in and get your copy today
Call +91 9686601289 or email us at info@ematz.in
for more details / questions

# பகவானும் ஞானிகளும்

**- MK ராமானுஜம்**

கடந்த மே மாதம் நமது மதுரபுரி ஆஸ்ரமத்தில் வஸந்தோத்ஸவம் மிக விமரிசையாக நடந்தது அனைவரும் அறிந்ததே. தினமும் வகைவகையான பூக்களாலும், தவணம், மரிக்கொழுந்து போன்ற தளிர்களாலும் ஊஞ்சல் அழகாக அலங்கரிக்கப்பட்டு, ஸ்ரீ மாதுரீஸகீ ஸமேத ஸ்ரீ ப்ரேமிகவரதனை அதில் எழுந்தருள செய்து, ஸ்ரீ ஸ்வாமிஜி தினமும் 'யுகள சதகம்' பாடிக் கொண்டாடியது அனைவரின் நெஞ்சைவிட்டு நீங்காத ஒரு அனுபவமாகும்.

உத்சவத்தில் சில நாட்கள் ஸ்ரீ ஸ்வாமிஜியின் பாகவத ப்ரவசனங்களும் நடந்தன. ப்ரவசனங்களில் பல அபூர்வமான, ரசமான, சாரமான விஷயங்களை ஸ்ரீ ஸ்வாமிஜி அருளினார். அதில் ஞானிகளின் மேன்மையை எடுத்துக் கூறும்போது, ஸ்ரீ ஸ்வாமிஜி அருளிய ஒரு ரசமான விஷயத்தை இங்கு அனுபவிப்போமா?

பகவான் பல அவதாரங்களாக தர்மத்தை காப்பதற்கும், பக்தர்களைக் காப்பாற்றுவதற்கும் அவ்வப்போது வருகின்றார். அப்படி மச்ச அவதரத்தில் 'ஹயக்ரீவன்' என்ற அசுரனோடு யுத்தம் செய்தார்; வராஹ அவதாரத்தில் ஹிரண்யாக்ஷனை வதம் செய்தார். நரசிம்மாவதாரத்தில் ஹிரண்யகசிபுவை வதம் செய்தார்; ராமாவதாரத்தில் ராவணனுடன் போரிட்டு அவனை வென்றார். க்ருஷ்ணாவதாரத்தில் பூமிக்கு பாரமாய் இருந்த கம்ஸ, சிசுபால, தந்தவக்த்ராதிகளுடன் யுத்தம் செய்துதான் வதம் செய்தார்.

இப்படி பகவான் கூட அவதாரம் செய்யும்போது தன்னை எதிர்த்தவர்களோடு ப்ரதியுத்தம் தான் நடத்தினார்.

ஆனால், ஞானிகளின் கதையே வேறாக இருக்கிறதே! பகவானின் பல அவதார கதைகளை அழகாய் சொல்லும் பாகவதமே ஒரு ஞானியின் சரிதத்தை சொல்லுகிறதே - ஜடபரதரின் உபாக்யானத்தில் சில நரபலியிடும் காட்டுமிராண்டிகள் ஜடபரதரையும் எதிர்த்தனர். அவர்கள் அவரை என்ன எதிர்த்தும் ஜடபரதர் சாந்தமாகவே இருந்தார்.

பகவான் கூட எதிர்த்தவர்களுடன் ப்ரதியுத்தமே செய்யும்போது, ஞானிகளோ எதிர்ப்பவர்களிடமும் சாந்தமாக இருந்துவிடுகின்றனர். இவர்களின் மேன்மையை என்னவென்று உரைப்பது. அதனால்தானோ ஸ்ரீகண்ணபிரானும் பகவத்கீதையில், ''ஞானி ஆத்மைவமே மதம்'' - இந்த ஞானிகளை எனது ஆத்மாவாகவே கருதுகிறேன் என்று தனது மார்தட்டிக் கொள்கிறான்!

# பக்தி பங்கப்படக் கூடாது

**- ஜானகிராமன் V**

இசைக்கு ஈர்ப்பு சக்தி அதிகம். பல சந்தர்ப்பங்களில் ஒரு இசைக் கச்சேரி நடக்கும் பொழுது சிறிய குழந்தைகள் கூட தன்னையறியாமல் தாளம் போடும். பக்தி பாடல்களை அல்லது கர்நாடக இசையை நாம் எவ்வளவு முறை கேட்டாலும், அவ்வளவு எளிதில் மனதில் பதிந்து விடாது. அதே ஒரு சினிமாப் பாடலின் இசை சட்டென்று நம்மை பிடித்துக் கொண்டுவிடும். நம்மை அறியாமல், நாம் முயற்சி செய்யாமலேயே மீண்டும் மீண்டும் வந்து கொண்டிருக்கும். கிராமிய பாடல்களுக்கு அத்தகைய ஒரு force உண்டு. அதனால்தான் சினிமா பாடல்களை பக்தர்கள் கேட்கக் கூடாது என்பது மட்டுமல்ல, அந்த சினிமா பாடல் போலவே பாட்டு எழுதி பாடவும் கூடாது.

ஸ்ரீமத் பாகவதத்தில் பகவான் அவதாரம் செய்தவுடன், வஸுதேவர்-தேவகியைப் பார்த்து சொல்கின்றார், தாங்கள் முந்தைய பிறவிகளில் கிராமிய கதை, சங்கீதம் இவைகளை தவிர்த்து ஹரிநாமகீர்த்தனம் செய்தீர்கள். அப்படி தவம் செய்த நீங்கள் என்னிடம் நானே குழந்தையாகப் பிறக்க வேண்டும் என்று வரம் கேட்டீர்கள். அதனால்தான் மூன்று பிறவிகளாக உங்களுக்கு குழந்தையாக பிறந்து வருகின்றேன் என்கின்றார். இதிலிருந்து ஒரு பக்தர் கிராம்ய கதைகள், கிராம்ய பாடல்கள், (சினிமா பாடல்கள், கதைகள்) இவைகளை தவிர்க்க வேண்டியது என்று தெரிய வருகின்றது. இது பக்தியை பங்கப்படுத்தும்.

**ஸ்ரீமத் பாகவதம் - ஸ்கந்தம் 10 - அத்யாயம் 3**

अजुष्टग्राम्यविषयावनपत्यौ च दम्पती ।
न वव्राथेऽपवर्गम् मे मोहितौ मम मायया ॥ ।३९।
गते मयि युवाम् लब्ध्वा वरम् मत्सदृशम् सुतम् ।
ग्राम्यान् भोगानभुञ्जाथाम् युवाम् प्राप्तमनोरथौ ॥ ।४०।

# பாலகர்களுக்கு ஒரு கதை

## மீண்டும் மீண்டும்

அது ஒரு அழகான காலைப் பொழுது. 12 வயது நிறைந்த சிறுவன் மாதவன் தனது காலையுணவை உட்கொண்டிருந்தான். திடீரென அவனுக்கு ஒரு எண்ணம் தோன்றிற்று, ‘நான் அன்றாடம் உண்டு வாழ்ந்து கொண்டிருக்கிறேனே, எனது வாழ்க்கையின் மதிப்பு தான் என்ன?’ இதை எண்ணியவாறு தன் அம்மாவிடம் இதற்கான பதிலைத் தெரிந்துக் கொள்ள வினவினான். ‘அம்மா! எனது வாழ்வின் மதிப்பு எவ்வளவு?’ இந்தக் கேள்வியால் ஆச்சரியமடைந்த அம்மா கூறினாள், ‘அட! அழகான கேள்வியைக் கேட்டுள்ளாய். இக்கேள்வியை உன் கருத்தில் வைத்துக் கொள்’ என்றவாறு ஒரு பளபளவென மின்னும் கல்லை எடுத்து, மாதவனின் கையில் கொடுத்தாள். ‘இதோ இந்த ரத்தினக் கல்லின் மதிப்பீட்டை முதலில் தெரிந்துக் கொண்டு வா. நான் உனது கேள்விக்கான பதிலைத் தருகிறேன்’ என்றாள். யாரிடம் கேட்பது என்பதையும் சொல்லி அனுப்பினாள்.

மாதவன் அதை எடுத்து சென்றுவிட்டு மாலை வீடு திரும்பினான். அவன் அம்மா, ‘மாதவா! என்ன நடந்தது?’ என்று கேட்டாள். பின் நடந்தனவற்றை தன் தாயிடம் விவரித்தான். ‘‘நான் தெருவிற்குச் சென்று, முதலில் நீ சொன்ன அந்த பழ வியாபாரியிடம் கேட்டேன், ‘ஐயா! இதன் மதிப்பு என்னவென்று கூற முடியுமா?’ அதற்கு அவர், ‘சிறுவனே! எனக்குத் தெரியவில்லை. எனினும், நான் இதற்கு விலையாக ஒரு வாழைப்பழத்தைக் கொடுப்பேன்’ என்றார். இந்த பதிலை என்னால் ஒப்புக்கொள்ள முடியவில்லை. அடுத்து, நீ சொன்ன அருங்காட்சியகத்தை நோக்கிச் சென்றேன்.

அங்கிருந்த அருங்காட்சியக பொறுப்பாளரை நோக்கிக் கேட்டேன், ‘உங்கள் அருங்காட்சியகம் இக்கல்லிற்கு எவ்வளவு தொகை அளிக்க இயலும்?’ அவர், ‘மாதவா! உன்னுடைய ஆர்வம் எனக்குப் பிடித்துள்ளது. எனினும், இத்தகைய பொருள் எங்கள் அருங்காட்சியகத்திற்கு அவசியமில்லை. ஆகவே ஒன்றும் கொடுக்க

முடியாது', என்றார். அவருக்கு நன்றி கூறிவிட்டு, வேறு யாரிடம் கேட்பதென்று யோசிக்கலானேன். நமது குடும்ப நண்பரான குமார் ஜுவல்ரி அவர்களது நகைக் கடைக்குச் சென்றேன்.

அவரை அணுகி எனது கேள்வியைக் கேட்டேன். குமார் அவர்கள் அந்தக் கல்லைப் பார்த்தார். ஆச்சரியத்தால் அவர் முகம் மலர்ந்தது. திரும்ப திரும்ப ஏதோ ஒரு அதிசயத்தைப் பார்ப்பது போல் பார்த்துக் கொண்டே இருந்தார். நான், 'Uncle! என்ன பார்த்துக் கொண்டே இருக்கிறீர்களே! எனக்கு என்ன பதில்? இதன் மதிப்பு தான் என்ன?' என்றேன். அவர், 'மாதவா! உன்னிடம் உள்ள இந்த ரத்தினக் கல், நான் இதுவரை பார்த்ததிலேயே குறைபாடற்ற ஒன்றாகும். என்னால் இக்கல்லின் மதிப்பைக் கற்பனை செய்து பார்க்கக்கூட முடியவில்லை. என்னை பொருத்தவரை, இந்த ரத்தினக் கல் விலைமதிப்பற்றது. இதை பத்திரமாக அம்மாவிடமே கொண்டு சேர்த்துவிடு. ஜாக்கிரதை!' என்றார். ஏன் என்னை இதைக் கேட்டு வர அனுப்பினீர்கள்?''

மாதவனைப் பார்த்து அவன் தாய் கூறினாள், ''மாதவா! உன்னை உலகத்தோர் அவரவர்களின் பார்வையில் தமக்கு தெரிந்த வரையில், உன் மீது அவர்களுக்கு உள்ள நம்பிக்கையின் அடிப்படையில் மதிப்பிடுவார்கள். ஆனால், அவை நீ விலைமதிப்பிட முடியாத அருமையானவன் என்ற உண்மையை மாற்ற இயலாது. நன்றாக நினைவில் கொள், எப்படி அந்த நகை வியாபாரி ரத்தினத்தை மதிப்பிட்டாரோ, அவ்வாறு நீ உன்னை அன்பு, பரிவு, நேசம் உடையவர்களோடு சூழ்ந்து கொள்ள வேண்டும். ஏனென்றால், குழந்தாய்! நீ உண்மையில் விலைமதிப்பற்றவன். உன்னிடம் உண்மையான பரிவுடையவர்களின் சூழலில் முடிந்தவரை இருந்து வா. அவர்கள்தாம் நீ விலை மதிப்பீடு செய்ய முடியாத அருமையானவன் என்று உணர்வார்கள். அவர்களேதாம் அதையே உனக்கும் உணர்த்துவார்கள்'' என்றாள்.

மாதவன் அந்த அருமையான ரத்தினக் கல்லை ஒரு பெருமித புன்னகையுடன் தன் மார்போடு அணைத்துக் கொண்டான்.

திருவல்லிக்கேணி பாண்டுரங்கன் கோவில், 12 Jun



வடலூர், கோட்டக்கரை ஸ்ரீ ராமர் கோவில், 16 Jun



வள்ளியூர் நாமத்வார் திறப்பு, 15 Jun



சாத்தூர் நாமத்வார் திறப்பு, 15 Jun






HUMBLE PRANAMS AT
THE LOTUS FEET OF GURUJI

DR SHRIRAAM MAHADEVAN
Consultant Endocrinologist
Endocrine & Speciality Clinic
Sri Ganesh Flats, Flat No 4, Ground floor,
Old no.72, New No 460,
TTK Road, Alwarpet, Ch – 18
Tel: 044-24350090, Mob: 9445880090
Email: mshriraam@gmail.com,
www.chennaiendocrine.com

# சத்சங்க செய்திகள்

- தொகுப்பு: சிவராமன்

## ஸ்ரீ ஸ்வாமிஜியின் சத்சங்கங்கள்

**மே 29**

காஞ்சி ஸ்ரீ மஹா ஸ்வாமிகள் அவர்களின் 125வது ஜயந்தி மஹோத்ஸவம் - ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள், ஸ்ரீ மஹாபெரியவாள் பாதுகைக்கு அபிஷேக ஆராதனை செய்தார்கள். பாடசாலை அத்யாபகர்கள், வித்யார்த்திகள் வேத பாராயணம் செய்தனர். மதுரபுரி ஆஸ்ரமம் பாகவதபவனம் முழுவதும் பூப்பந்தல் வேயப்பட்டு, ரத்னகம்பளம் விரிக்கப்பட்டு, ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் ஸ்ரீ மஹாபெரியவாளின் பாதுகைகளை சிரமேற்கொண்டு இரு புறங்களிலும் வேதகோஷம் முழங்க எடுத்துச்சென்று ஸ்ரீ மஹாபெரியவாளுக்குரிய மேனாவில் வைக்க, பாதுகா புறப்பாடு நடந்தேரியது.

**மே 31**

சென்னை அருகே கூடுவாஞ்சேரி, ஆதனூர் கிராமம், அபயம் பஜனை மந்திரத்தில் 48 நாட்கள் நடைபெற்ற யோகி ராம்சுரத்குமார் அகண்ட நாம வேள்வி பூர்த்தி தின வைபவங்களில் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் கலந்துகொண்டார்கள்.

**ஜூன் 2**

ஸ்ரீரங்கம், ஸ்ரீ ப்ரேமிக வேதாஸ்ரமம் விஜயம். அங்கு நடைபெற்று வந்த புனரமைப்புப் பணிகளை பார்வையிட்டார்கள்.

**ஜூன் 3**

திண்டுக்கல் - யோகி ராம்சுரத்குமார் பஜனை மடம் கும்பாபிஷேகம் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் திருக்கரங்களினால் நடைபெற்றது.

எர்ணாகுளம் நாமத்வார் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் அருளாசியுடன் துவக்கப்பட்டது. ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் தொலைபேசி மூலம் அருளுரை வழங்கினார்கள். ஸ்ரீமத் பாகவத பாராயணமும் கோபகுடீர குழந்தைகளின் மதுரகீதம் பஜனையும் நடைபெற்றது. இதன் பொறுப்பாளராக ஸ்ரீ கோலாஹலதாஸ் இருந்து வருகின்றார்.

**ஜூன் 3**

ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் இயற்கை ததும்பும் அமரபூண்டி விஜயம் செய்தார்கள்.

**ஜூன் 4**

ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் மதுரை நாமத்வாருக்கு மாலை **6-8** மணியளவில் விஜயம் செய்து ஸத்ஸங்கம் நிகழ்த்தினார்கள்.

**ஜூன் 5**

மதுரை கள்ளழகர் கோவிலுக்குச் சென்று ஸ்வாமி தரிசனம் செய்தார்கள்.

**ஜூன் 6**

ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் தாயில்பட்டி விஜயம் செய்து பிறகு சிவகாசி ஸ்ரீ வெங்கடேசன் அவர்கள் இல்லத்தில் நடைபெற்ற ராதா கல்யாணத்தை ஒட்டி நடைபெற்ற பஜனையில் கலந்துகொண்டார்கள். பிறகு விருதுநகர் நாமத்வார் சென்றார்கள்.

**ஜூன் 7**

சிவகாசி ஸ்ரீ வெங்கடேசன் அவர்கள் இல்லத்தில் நடைபெற்ற ராதாகல்யாண வைபவங்களில் கலந்துகொண்டார்கள். பிறகு திருநெல்வேலிக்கு விஜயம் செய்து பாளையங்கோட்டையில் புதிய நாமத்வார் ஆரம்பிப்பதற்கு அருளாசி வழங்கினார்கள். தூத்துக்குடி நாமத்வாருக்குச் சென்று இரவு தங்கினார்கள்.

**ஜூன் 8**

ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள், தூத்துக்குடி அருகில் சில கோசாலைகளை பார்வையிட்டார்கள். பிறகு மாயம்மா ஸமாஜம், கன்யாகுமரி விஜயம் செய்தார்கள். அங்கு அருளுரை வழங்கிய பிறகு மஹாதானபுரம், திருவட்டா சென்றார்கள். இரவு மதுரை நாமத்வார் திரும்பினார்கள்.

**ஜூன் 10**

ஏகாதசி - காலை - மதுரபுரி ஆஸ்ரமம் - ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்களுக்கு பகல் **2** மணி வரை தீர்த்தம் வழங்கினார்கள். மாலையில் சென்னை திருவல்லிக்கேணி ஸ்ரீ பாண்டுரங்க பஜனை மண்டலி விஜயம் செய்து அங்கு நடைபெற்ற ஸ்ரீ ஞானேஸ்வர பாகவதரின் அபங்க பஜனையில் கலந்து கொண்டார்கள். பிறகு ஸத்ஸங்கம், நாம பெருமை பற்றி அருளுரை வழங்கினார்கள்.

**ஜூன் 11**

சென்னை ப்ரேமிகபவனத்தில் ஸத்ஸங்கத்தில் கலந்துகொண்டார்கள்.

**ஜூன் 13**

ரோஹிணி நக்ஷத்திரத்தை ஒட்டி ஸ்ரீ குருபாதுகா புறப்பாடு சேங்கனூரில் நடைப்பெற்றது. ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் இதில் கலந்துகொண்டார்கள். மாலையில் சேங்கனூர் ஸ்ரீ ஸ்ரீநிவாஸபெருமாள் திருக்கோயிலில் நடைபெற்ற தங்கரத புறப்பாட்டில் கலந்துகொண்டார்கள். மாலையில் கும்பகோணம் ஸ்ரீ ஆராவமுதன் கோயில் சேர்த்தி உத்ஸவம் சேவித்தார்கள்.

**ஜூன் 14**

மதுரை நாமத்வார் விஜயம் செய்தார்கள்.

**ஜூன் 15**

மதுரையிலிருந்து புறப்பட்டு கன்யாகுமரி சென்றார்கள். ஸ்வாமி அய்யாவழி தோப்பு விஜயம் செய்தார்கள். வள்ளியூர் சென்று நாமத்வார் துவக்கி வைத்தார்கள். சாத்தூர் சென்று அங்கு ஒரு புதிய நாமத்வார் துவக்கி வைத்தார்கள். இரவு சேங்கனூர் திரும்பினார்கள்.

**ஜூன் 16**

வடலூர், கோட்டக்கரை ஸ்ரீ ராமர் கோவிலில் நடைபெற்ற சத்சங்கத்தில் கலந்துகொண்டார்கள். அங்கு நடைபெற்ற ஸத்ஸங்கத்தின் வரலாற்றுக் கல்வெட்டை திறந்துவைத்தார்கள். மாலையில் நடைபெற்ற திவ்யநாமத்தில் கலந்துகொண்டார்கள். பிறகு ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள் பற்றி ஸங்கீத உபன்யாசம் நிகழ்த்தினார்கள். ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் ஸத்ஸங்கம் பூர்த்தியில் கனத்த மழை பெய்து வடலூர் பக்தர்கள் மனதைக் குளிர்வித்தது.

**ஜூன் 17**

சென்னை கே.கே நகர் மஸ்கட் ஸ்ரீ மணிகண்டன்ஜி இல்லத்தில் நடைபெற்ற சத்சங்கத்தில் - நாமகீர்த்தனத்தில் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் கலந்துகொண்டார்கள்.

**ஜூன் 23**

ஸ்வாதி - காஞ்சி ஸ்ரீ வரதரின் ஆனி கருடசேவையை தரிசிக்க ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் காஞ்சிபுரம் சென்றார்கள். கீர்த்தனாவளி மண்டபத்திற்கு விஜயம் செய்தார்கள்.

ஜூன் 24

ஏகாதசியை முன்னிட்டு காலையில் மதுரபுரி ஆஸ்ரமத்தில் பக்தர்களுக்கு தீர்த்த ப்ரசாதம் வழங்கினார்கள். மாலையில் மேலமாம்பலம் ஸ்ரீ அயோத்யா அஸ்வமேத மஹாமண்டத்தில் **GRAND BHAJAN CARNIVAL-XI** கலந்துகொண்டு அருளுரை வழங்கினார்கள்.

# சத்சங்க செய்திகள்

## ஸ்ரீ ப்ரேமிக ஜகன்னாதர் ரதோத்ஸவம்

ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் அருளாசியுடன் அமைந்துள்ள **GOD** - நாமத்வார்களில் ஸ்ரீ ஜகன்னாதர், ஸ்ரீ பலராமன், ஸ்ரீ சுபத்ரா மூர்த்தங்களின் கோலாஹலமான ரத யாத்திரை ஹரே ராம.. மஹாமந்திரம் மற்றும் பஜனையுடன், நகர ஸங்கீர்த்தனமாக முக்கிய வீதிகளில் வலம் வந்தது.

தூத்துக்குடி, சிவகாசி, விருதுநகர், அம்பாசமுத்திரம், மதுரை, திருச்சி, ஸ்ரீ பெரும்பத்தூர் மற்றும் பெரியகுளம் ஆகிய பகுதிகளில் வெகு சிறப்பாக நடந்த ரதோத்சவத்தில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் மிக ஆர்வமுடன் கலந்து கொண்டார்கள். ரதோத்சவத்திற்கு அந்த அந்த நாமத்வார் பொறுப்பாளர்களும் பக்தர்களும் அனைத்து ஏற்பாடுகளையும் மிகச் சிறப்பாக செய்திருந்தனர்.

மே 29

அரக்கோணத்தில் ஸ்ரீ கேசவன்ஜி ஸத்ஸங்கம் நிகழ்த்தினார்கள்.

ஜூன் 3

சென்னை அருகே பள்ளிக்கரனையில் பம்மல் பாலாஜி அவர்கள் ஸத்ஸங்கம் நிகழ்த்தினார்கள்.

ஜூன் 7

கடலூரில் ஸ்ரீ கதாதரன் சத்சங்கம் நிகழ்த்தினார்.

இளம்பிள்ளையில் ஸ்ரீ கபில வாசுதேவன் சத்சங்கம் நிகழ்த்தினார்.

**ஜூன் 8**

பரமக்குடியில் ஸ்ரீ ஸ்ரீராம் சத்சங்கம் நிகழ்த்தினார்.

ஷிவாதபுரத்தில் ஸ்ரீ கபில வாசுதேவன் சத்சங்கம் நிகழ்த்தினார்.

**ஜூன் 15-19**

விருதுநகர் நாமத்வாரில் ஸ்ரீ கேசவன்ஜி "திருமாலை" பற்றி உபன்யாசம் நிகழ்த்தினார்கள்.

**ஜூன் 16-22**

சென்னை, நங்கைநல்லூர் **GOD SATSANG** சார்பில், நங்கைநல்லூர், ரஞ்சனி ஹாலில் மாலை **6.30 - 8.30** பக்தவிஜயம் பற்றி கன்யா சகோதரிகள் உபன்யாசம் நிகழ்த்தினார்கள்.

ஜயதேவர், புரந்தரதாசர், துளசிதாசர், பத்ராசல ராமதாசர், நாராயண தீர்த்தர், தியாகராஜர், ஆண்டாள் கல்யாணம் பற்றி உபன்யாசம் நிகழ்த்தினார்கள். பூர்த்தி தினத்தன்று, நகர ஸங்கீர்த்தனம் நடைபெற்றது.

**ஜூன் 18-24**

சென்னை, திருவான்மியூரில், ஸ்ரீ கபில வாசுதேவன், ஸ்ரீ சனத் குமார், ஸ்ரீ கதாதரன் மற்றும் ஸ்ரீ ஸ்ரீராம், பாகவத சப்தாஹம் நிகழ்த்தினார்கள்.

**ஜூன் 24**

சென்னை ப்ரேமிகபவனத்தில் மாலை **4-6** அகிலா ஹரிஹரன் - துருவ சரித்ரம் பற்றி உபன்யாசம் நிகழ்த்தினார்கள்.

மதுரை நாமத்வாரில் மாலை **6.30** மணிக்கு ஸ்ரீ மந்திரராஜ் கௌதம் கூட்டுப் பிரார்த்தனை நிகழ்த்தினார்கள்.

**ஜூன் 24 - ஜூலை 1**

திண்டிவனத்தில் கன்யா சகோதரிகள் பாகவத சப்தாஹம் நிகழ்த்தினார்கள்.

**Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji**



**Gururam Consulting Private Ltd**

# அர்த்த

# अर्थ

## மாதம் ஒரு சம்ஸ்க்ருத வார்த்தை

- ஸ்ரீ விஷ்ணுப்ரியா

'அர்த்த' எனும் வார்த்தையின் பல அர்த்தங்களை இப்பொழுது பார்ப்போம். பொதுவாக இந்த சொல்லிற்கு 'அர்த்தம்' (MEANING) என்று பொருள் என்று எல்லோரும் அறிந்ததே. पदार्थ, शब्दार्थ என்றெல்லாம் சொன்னால், ஒரு சொல்லின் பொருள் என்று அர்த்தம்.

'அர்த்த' என்றால் PURPOSE, GOAL, AIM என்று ஒரு பொருள் உண்டு. அந்த அர்த்தத்தில்தான் 'புருஷார்த்தம்' என்ற சொல் வருகின்றது. சதுர்வித புருஷார்த்தங்கள், அதாவது நான்கு வித புருஷார்த்தங்கள் என்று ப்ரஸித்தமாக கூறுவதுண்டு அல்லவா? புருஷார்த்தம் என்றால் மனிதனின் வாழ்க்கையில் அவன் அடைய வேண்டியவைகள். அவை தான் தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்று கூறப்படுகின்றன. இதில் இரண்டாவதாக வரும் 'அர்த்தம்' என்பது இந்த சொல்லின் மற்றொரு அர்த்தத்தைக் குறிக்கும். இந்த 'அர்த்தம்' என்ற புருஷார்த்தம் பொருளை, அதாவது தனத்தை குறிக்கின்றது. அதாவது மனிதன் வாழ்க்கையில் தர்மத்தைக் கடைப்பிடித்து, தேவையான பொருளை ஈட்டி, சம்பாதித்த பொருளைக் கொண்டு காமம் எனும் ஆசைகளை பூர்த்தி செய்து கொண்டு பிறகு, கடைசி புருஷார்த்தமான மோக்ஷத்தை அடைய வேண்டும் என்பது தாத்பர்யம்.

ஸ்ரீ நாராயண தீர்த்தரும் ‘க்ருஷ்ணம் கலய ஸகி ஸு⁼ந்தரம்’ என்ற தரங்கிணியில் - ‘अर्थ शिथिलीकृतानर्थ श्री नारायणतीर्थ परम पुरुषार्थ’ என்று அழகாக பாடுகிறார். ஸ்ரீ க்ருஷ்ணனே அடையவேண்டிய ஸாரமான பொருள். அவன் எல்லா அனர்த்தங்களையும் போக்கடிப்பவன். நாராயண தீர்த்தரின் பரமமான புருஷார்த்தமும் அவனே என்கிறார்.

‘அர்த்தம்’ என்றால் தனம், பொருள் என்று ஒரு அர்த்தம் உள்ளது என்று பார்த்தோம். ஸ்ரீ க்ருஷ்ணன் பகவத் கீதையில் நான்கு விதமானவர்கள் என்னை பஜிக்கிறார்கள். அவர்கள் - ‘आर्ती जिज्ञासु: अर्थार्थी ज्ञानी च भरतर्षभ’ - ஆர்த்தீ, ஜிக்ஞாஸு⁼, அர்த்தார்த்தீ மற்றும் ஞானீ என்கின்றான். அதில் இந்த அர்த்தார்த்தீ என்பவன் வாழ்வில் மேலும் பொருள், ஸௌக்யம் வேண்டும் என்று பகவானை பஜிப்பவன். ‘அர்த்தம்’ எனும் தனத்தை விரும்புபவன். ஆனால் மஹான்கள் இந்த ‘அர்த்தம்’ என்பது மனிதனை மாயையில் தள்ளக் கூடியது என்று கூறுகிறார்கள். ஸ்ரீ ஆதி ஶங்கரர் பஜ கோவிந்தத்தில் ‘அர்த்தம் அனர்த்தம் பாவய நித்யம்’ என்கிறார். அர்த்தம் (பொருள்) என்பது அனர்த்தம் (பொருள் இல்லாதது - MEANINGLESS) என்பதை தினமும் நினைவில் வைத்திரு என்கிறார்.

‘அர்த்தார்த்தீ’ என்ற சொல்லில் முதலாக வரும் ‘அர்த்தம்’ என்பது பொருளை குறிக்கும். இரண்டாவதாக வரும் அர்த்தீ என்றால் வேண்டுபவன் என்று பொருள். அர்த்தனம் என்ற சொல்லிற்கு வேண்டுவது, கேட்பது, யாசிப்பது என்று பொருள்.

ஸ்ரீமத் பாகவதம் கூறுகிறது सत्यं दिशत्यर्थितं अर्थितो नृणां। (5-19-27) பகவான், மனிதர்கள் தன்னிடம் எதையெல்லாம் கேட்கிறார்களோ அதையெல்லாம் தருகிறான் என்று கூறுகிறது.

இந்த அர்த்தத்தில் தான் ‘प्र’ என்ற உபஸர்கத்தை अर्थ என்ற சப்தத்திற்கு சேர்த்தால் ‘प्रार्थना’ என்ற சொல் வருகிறது. விசேஷமாக வேண்டிக் கொள்வது என்று பொருள்.

அதேபோல் ‘वि’ என்ற உபஸர்கத்தை சேர்த்தால் व्यर्थ (विगतो अर्थ:) என்ற சொல் வருகிறது. ‘வ்யர்த்த’ என்றால் பொருளற்றது (meaningless) என்று அர்த்தம். காலத்தை வ்யர்த்தமாக கழிக்கக் கூடாது என்று பெரியோர்கள் கூறுவதுண்டு. இது போல் பல கோணங்களில் இந்த சப்தத்திற்கு பொருள் அமைந்துள்ளது.

# சைதன்ய மஹாப்ரபு — 22

## நிமாயியின் ப்ரேம பக்தி...

ஓவியர் : கோவி





புரியவில்லையே..முன்பு எடுத்த பாடத்தில் வரும் இந்த சப்தத்திற்கு அர்த்தம் புரியவில்லை.
எல்லா சப்தத்தின் பொருளும் கிருஷ்ணன் மற்றுமே ! ஹே கிருஷ்ண என்னால் உன்னை விட்டு இருக்கமுடியாது..
எமக்கு புரியவில்லையே!! என்ன கூறுகிறீர்!
இவ்வுலகமே நம் கிருஷ்ணன் ஆகும்... கிருஷ்ணன் மற்றுமே சத்தியம்!
மாணவர்களே! இனி எம்மால் இந்த புத்தக பாடம் எடுக்க இயலாது. கிருஷ்ணனை தவிர வேறு ஒன்றும் அறியேன்!
ஸ்ரீவாசரே! யாத்திரையிலிருந்து வந்த நிமாயி வித்தியாசமாக நடந்து கொள்கின்றார்.. திடீர் என்று அழுகின்றார். தழுதழுத்த குரலில் 'கிருஷ்ணா' என்று சொல்லிக்கொண்டே மூர்ச்சை ஆகின்றார்...பயமாக உள்ளது
இது உண்மையா.. இப்படி செய்தாரா?
ஆம். மேலும் பாடசாலையில் கூட பாடத்திலிருந்து விளக்கம் கேட்டால் கிருஷ்ணனை பற்றியே பேசுகின்றாராம்!!!


இதெல்லாம் ப்ரேம பாவத்தின் லக்ஷணங்கள். நானே சென்று நிமாயியின் நிலையை பார்த்துவிட்டு வருகின்றேன்!
நினைத்தது சரிதான். நிஜ ப்ரேமானுபாவத்தில் தான் திளைத்துக்கொண்டு இருக்கிறார்...
ஸ்ரீவாச பண்டிதரே! எனக்கு என்ன ஆகிவிட்டது என்று புரியவில்லை.
எல்லோரும் என்னை பித்தன் என்று கூறுகிறார்கள்.. எனக்கு கிருஷ்ணனை தவிர வேறு எதுவும் தெரியவில்லை
கவலை படாதே. உனக்கு ஏற்பட்டது எல்லா பக்தர்களும் ஏங்கிக்கொண்டு இருக்கும் உத்தமான பக்தி லக்ஷணங்கள். பவித்ரமான ராதாதேவி இடம் மட்டுமே முழுவதுமாக இது காணப்பட்டுள்ளது ...
சசி மாதா! இத்தகைய மகனை ஈன்றெடுத்த தாங்கள் பாக்கியசாலி! நிமாயி ப்ரேம அவஸ்தையில் தான் திளைத்துக்கொண்டு இருக்கின்றார்.. இந்த அவஸ்தை உலகம் அறியாது. ஆதலால் தாங்கள் கவலை பட வேண்டாம்.
ஜெய் நிமாயி! பக்தி மற்றும் பகவன் நாமம் எங்கும் பரவட்டும்!!

# படித்ததில்  பிடித்தது

## Why Religious People Live Longer

June 15 2018
Times of India

நாத்திகவாதிகளை விட ஆன்மீகத்தில் ஈடுபாடு உள்ளவர்கள் நான்கு ஆண்டுகள் கூடுதலாக வாழ்வார்கள் என்று அமெரிக்காவில் நடந்த ஆய்வு ஒன்றில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவில் வெளியிடப்பட்ட ஆயிரத்திற்கும் மேற்பட்ட இரங்கல் செய்திகளை ஆராய்ந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ள இந்த கூடுதல் நான்கு ஆண்டு காலம், இறந்தவர்களின் பாலினம் மற்றும் திருமண நிலை (Marital Status) என்ற ஆயுட்காலத்தை பாதிக்கும் இரண்டு முக்கியமான காரணீகளைக் (Factors) கொண்டு கணக்கிடப்பட்டது.

பாலினத்தைப் போல் ஆன்மீகத் தொடர்பும் நீண்ட ஆயுட்காலத்திற்கு வலுவான பாதிப்பை உண்டாக்கும் என்று ஓஹாயோ (Ohio) மாநிலப் பல்கலைக்கழகத்தில் மருத்துவம் பயிலும் லாரா வாலஸ் என்ற மாணவி கூறுகின்றார். 'Social Psychological and Personality Science' என்பதில் வெளியிடப்பட்டுள்ள இந்த ஆய்வில், ஆயுட்காலம் நீடிப்பதற்கு காரணம் ஆன்மீகத்தில் ஈடுபாடு உள்ளவர்கள் பல தன்னார்வ தொண்டுகள் செய்கின்றார்கள் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு சமூக தொண்டுகளில் பங்கேற்பதினால் நீண்ட ஆயுட்காலம் உள்ளது என்று இதற்கு முன் நடத்தப்பட்ட ஆராய்ச்சியின் முடிவுகள் கூறுகின்றன.

இந்த ஆராய்ச்சி ஆன்மீக நிகழ்வுகளில் பங்கேற்பதற்கும் ஒரு மனிதன் எவ்வளவு காலம் வாழ்கின்றான் என்பதற்கும் தொடர்பு உள்ளது என்று வலுவான ஆதாரங்களுடன் சுட்டிக்காட்டுகின்றது என்கிறார் ஓஹியோ (Ohio) மாநில பல்கலைக்கழகத்தில் துணை பேராசிரியராக பணிபுரியும் Baldwin Way.

**ஜனவரி மற்றும் பிப்ரவரி 2012 ஆம் ஆண்டில் 'Des Moines Register' என்பதில் வெளியிடப்பட்ட 505 இரங்கல் செய்திகளைக் கொண்டு முதல் ஆய்வு நடத்தப்பட்டது. இறந்தவர்களின் வயது மற்றும் ஆன்மீக இணைப்புகளை குறித்துக் கொண்டதை தவிர, ஆராய்ச்சியாளர்கள் பாலினம், திருமண நிலை, சமூக மற்றும் தன்னார்வ தொண்டுகளின் எண்ணிக்கை போன்றவற்றையும் பதிவு செய்தனர்.**


**ஆன்மீக ஈடுபாடு என்று இரங்கல் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்கள் அவ்வாறு எதுவும் குறிப்பிடாத நபர்களை விட 9.45 ஆண்டுகள் கூடுதலாக வாழ்ந்தார்கள் என்று ஆராய்ச்சியின் முடிவுகள் சுட்டிக்காட்டுகின்றன. பாலினம் மற்றும் திருமண நிலையை கணக்கில் எடுத்துக்கொண்ட பின் இந்த இடைவெளி 6.48 ஆண்டுகளாக குறைந்தது.**

**ஆகஸ்ட் 2010 ஆம் ஆண்டு முதல் ஆகஸ்ட் 2011 ஆம் ஆண்டு வரையில் அமெரிக்காவின் 42 முக்கிய நகரங்களில் பல்வேறு செய்தித்தாள்களில் வெளியான 1096 இரங்கல் செய்திகளைக் கொண்டு இரண்டாவது ஆய்வு நடத்தப்பட்டது.**

**ஆன்மீக ஈடுபாடு என்று இரங்கல் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்கள் அவ்வாறு எதுவும் குறிப்பிடாத நபர்களை விட 5.64 ஆண்டுகள் கூடுதலாக வாழ்ந்தார்கள் என்று இந்த இரண்டாவது ஆராய்ச்சியின் முடிவுகளும் சுட்டிக்காட்டுகின்றன. பாலினம் மற்றும் திருமண நிலையை கணக்கில் எடுத்துக்கொண்ட பின் இந்த இடைவெளி 3.82 ஆண்டுகளாக குறைந்தது.**

**சமூக தொண்டுகளில் பங்கேற்பது ஆயுட்காலத்தை நீட்டிக்கலாம் என்றாலும், ஆரய்ச்சியாளர்கள் அவை மட்டுமே காரணிகள் அல்ல என்கின்றார்கள். மதுபானம் அருந்துவதை தவிர்ப்பது, போதை பொருள்களை எடுத்துக்கொள்ளாமல் இருப்பது போன்ற வாழ்க்கைமுறை, மன அழுத்தத்தைக் குறைக்கும் பிரார்த்தனை அல்லது தியானம் போன்ற பயிற்சிகளை மேற்கொள்வதும் ஆயுட்காலத்தை நீட்டிக்கும்.**

**ஆன்மீகத்தால் ஆயுட்காலத்தை நீட்டிக்க முடியும் என்று சமீபத்தில் நடந்த இந்த ஆராய்ச்சியும் சுட்டிக்காட்டுகின்றது. ஆன்மீக நிகழ்ச்சிகளில் பங்கேற்பதால் ஆயுட்காலம் நீட்டிக்கும் என்று 2016 ஆம் ஆண்டில் JAMA Internal Medicine என்ற பத்திரிகையில் வெளியிடப்பட்ட ஆய்வு ஒன்று கூறுகின்றது.**







**MRP Rs 100**

**Released by:**

**CHAITANYA MAHAPRABHU NAMABIKSHA KENDRA**

**Plot No11, Door No 4/11, Netaji Nagar Main Road,**

**Jafferkhanpet, Chennai - 600083**

**Ph:+91-44-24895400, +91-9442613710**

| சத்சங்க நிகழ்ச்சிகள் | |
|---|---|
| 3 ஜூலை 2018 | கடாரம்கொண்டான் சத்சங்கம் |
| 4 ஜூலை 2018 | அணைக்கட்டு மற்றும் ஆம்பூரில் சத்சங்கம் |
| 9 ஜூலை 2018 | ஏகாதசி |
| 10 ஜூலை 2018 | ரோஹிணி நக்ஷத்ர புறப்பாடு, சேங்கனூர் |
| 12 ஜூலை 2018 | அபயம் பிரதிஷ்டா தினம், கூடுவாஞ்சேரி |
| 14 ஜூலை 2018 | ஸ்ரீ ப்ரேமிக ஜகந்நாத ரத யாத்திரை, கோவிந்தபுரம் |
| 15 ஜூலை 2018 | வேப்பம்பட்டு மற்றும் குரோம்பேட்டையில் சத்சங்கம் |
| 23 ஜூலை 2018 | ஆஷாட ஏகாதசி |
| 27 ஜூலை 2018 | குரு பூர்ணிமா, சேங்கனூர் |

## அறிவிப்பு

அனைத்து வாசகர்களும், தங்களது தொலைபேசி எண்ணை, தங்களது சந்தா எண்ணுடன் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

Email: helpdesk@madhuramurali.org
Ph: "24895875"

## ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களுக்கு தெரிவிக்க வேண்டிய விஷயங்களை அனுப்பவேண்டிய முகவரி

Dr.A.BHAGYANATHAN,
Personal Secretary to
HIS HOLINESS
SRI SRI MURALIDHARA SWAMIJI
Plot No 11, Door No 4/11,
Netaji Nagar Main Road,
Jafferkhanpet, Chennai - 83.
Tel. : +9144-2489 5875, Email : contact@namadwaar.org

- Publisher : S. Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission
- Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the publisher of Madhuramurali.
- Views expressed in articles are those of the respective Authors and do not reflect the views of the Magazine.
- Advertisements in Madhuramurali are invited.

மதுரமுரளி




திண்டுக்கல் யோகி ராம்சுரத்குமார் கோவில் கும்பாபிஷேகம், 3 Jun



Registered with The Registrar of Newspapers for India
R.No 62828/1995 ; Regd. No. TN/CC(S)DN/119/18-20
WPP No. TN/PMG(CCR)WPP–608/2018-2020
Licensed to post without prepayment

Date of Publication: 1st of every month
Date of Posting: 5th and 6th of every month

Published by S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No2, Old No 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 83
Printed by Mr R. Kumaravel of Raj Thilak Printers (P) Ltd, 1/545A. Sivakasi Co-op Society Industrial Estate, Sivakasi. Editor: S.Sridhar

**காஞ்சி ஸ்ரீ வரதராஜ பெருமாள் கோவில் ஆனி கருட சேவையில் கீர்த்தனாவளி மண்டபம் அருகில் ஸ்ரீ ஸ்வாமிஜி, 23 Jun**

